செ.வெ.எண்:17-2020 நாள்:14.04.2020

# பத்திரிக்கைச்செய்தி

விழுப்புரம் மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று தடுப்பு தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், நோய் தொற்று பரவுதலை தடுக்கும் விதமாக குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு 144-கீழ் 24.03.2020 முதல் 15.04.2020 வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. அது மேலும், 30.04.2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களின் அவசர மருத்துவ உதவி, திருமணம், இறப்பு போன்ற இதர அத்தியாவசியத் தேவைகளுக்கான வாகனங்களை இயக்குவதற்கான வாகன அனுமதி சீட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நேர்வில் வாகன உரிமையாளர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வராமலேயே வாகன அனுமதி சீட்ட பெறுவதற்கான விண்ணப்பத்தினை பதிவு செய்ய http://viluppuram.nic.in என்ற இணையதள முகவரியில் செய்யப்படும் விண்ணப்பம் செய்தி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையில் செய்யப்படும் விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக பரிசீலனை செய்து ஒப்புதல் அளிக்கப்படும். ஒப்புதல் அளிக்கப்பட்ட மின்னணு வாகன அனுமதி சீட்டினை இணையதளம் மூலமாகவே விண்ணப்பதாரர் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். எனவே, ஊரடங்கு உத்திரவு அமலில் இருக்கும் இக்காலத்தில் பொதுமக்கள் வீட்டினை விட்டு வெளியே வராமலேயே இவ்வசதியினை பயன்படுத்திக் கொள்ள விழுப்புரம் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனைவரையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்